# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092344

1. District மாவட்டம் : Pudukkottai    PS: காவல்நிலையம் V4AC    Year: ஆண்டு 2019    FIR No.: மு.த.அ. எண் 10/19    Date: நாள் 26.9.19

2. (i) Act சட்டம்: Crpc and PC (Amendment) Act 2018    Sections பிரிவுகள்: 102 Crpc F/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018

   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 25.9.19    Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 19.00 hrs    Time to : நேரம் வரை 22.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    Sub Register office Mannanelgudi Pudukkottai District 75 km East

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. Balu    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Periyannan

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம் Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் District inspection cell Inspector, Trichirapalli    (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. Tr. Shanmuganathan S/o Nagarethinam, Assistant I/c Sub Register, Mannanelgudi, Pudukkottai district 2. Tr. Paulraj S/o Alagai Junior Assistant sub register office Mannanelgudi 3. Tr. Palanisamy S/o Mani Assistant sub register office, Mannanelgudi 4. Tr. Ponnaiah S/o Alagan, watchman Sub Register office Mannanelgudi

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)

Seizure amount Rs 17,590

10 Total value of properties stolen / involved —

11 Inquest Report / Un-natural death Case No, if any —

12 FIR Contents

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

25-09-2019ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து மாலை 07.00 மணி முதல் இரவு 10.30 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் திரு.பெ.பாலு, வயது 57/2019, த/பெ. பெரியண்ணன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி, பெறுநர், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் வடக்கு தெற்காக செல்லும் இசிஆர் சாலையில் இடது பக்கமாகவும், மணமேல்குடி காவல் நிலையத்திற்கு எதிர்புறமாகவும் தெற்குபுற நுலைவாயில் கொண்ட தரைத்தளம் மட்டும் உள்ள மணமேல்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளார் மற்றும் ஊழியர்கள் பத்திரபதிவு செய்யவரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டு

13 ... as mentioned at item No 2 registered the case ... Rank ... to take up the investigation / Refused ... on point of jurisdiction

FIR read over to the complainant / informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

14 Signature / Thumb impression of the Complainant / Informant

Signature of the Officer in-charge, Police Station

26/09/2019.

Deputy Supdt of Police
Vigilance & Anti - Corruption
Pudukkottai District

Rank DSP No

26-9-19

பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் 25.09.2019ஆம் தேதி நானும், திரு.ஆர்.முத்துக்கருப்பன், தனி வட்டாட்சியர் (அகதிகள் நலம்) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.கருப்பையா ஆகியோருடன் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின் போது மணமேல்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் தரைத்தளத்தில் உள்ள தெற்கு பக்கம் நுழைவாயில் கொண்ட சார் பதிவாளர் அலுவலக அறையில் 1) திரு.சண்முகநாதன் த/பெ நாகரெத்தினம், உதவியாளர், சார் பதிவாளர் (பொறுப்பு), 2) திரு.நாகரெத்தினம் த/பெ இராஜேந்திரன், கேமரா ஆப்ரேட்டர், 3) திரு.பால்ராஜ், த/பெ அழகர், இளநிலை உதவியாளர், 4) திரு.பழனிச்சாமி, த/பெ மணி, உதவியாளர், 5) திரு.பொன்னையா, த/பெ அழகன், வாட்சுமேன், மணமேல்குடி ஆகியோர் அவர்களது இருக்கையில் அமர்ந்திருந்தனர். மேலும் 6) திரு.கார்த்திக் த/பெ பரமசிவம், (தனிநபர்) மறவப்பட்டி, அகரப்பட்டி அஞ்சல், புதுக்கோட்டை (சார்பதிவாளர் கார் ஓட்டுநர்) என்ற தனிநபரும் அலுவலகத்தின் உள்ளே இருந்தார். மேலும் சார்பதிவாளர் இருக்கைக்கு முன்பு 7) திரு.சுரேந்தர், த/பெ கிருஷ்ணசாமி, 1414, கம்பன் நகர், புதுக்கோட்டை, 8) திரு.சண்முகப்பெருமாள், த/பெ ஹரி, எண்.9, வசந்த் நகர், கருமண்டபம், திருச்சி, 9) திரு.பராசரன், த/பெ தங்கவேல் எண்.290/31 எல்என்புரம், அறந்தாங்கி, 10) திரு.பாஸ்கரன், த/பெ பாலசுப்பிரமணியன், 33, உசிலங்குளம் 2ம் வீதி, புதுக்கோட்டை, 11) திரு.கார்த்திக்கேயன், த/பெ நாராயணன் 1029/ஏ, தாவூதுமில், சிப்காட், புதுக்கோட்டை ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அரசு அலுவலர்கள் மற்றும் தனிநபர்களிடம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் தன்னையும் மேற்படி அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டு திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்த விபரத்தை கூறி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திடீர் ஆய்வின் போது சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.சண்முகநாதன் என்பவரை என்பவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த கருப்பு நிற பேண்டின் வலது புற பாக்கெட்டில் இருந்து ரூ.1000/-ம் இருந்தது. அவரது இருக்கைக்கு எதிரே இருந்த மர டேபிளில் வலது டிராயரை திறந்து பார்க்க அதில் ரூ.13,980/- இருந்தது. மேற்கண்ட பணத்திற்கு அவரிடம் விளக்கம் கேட்க தான் காலையில் அலுவலகத்திற்கு வரும் போது வீட்டில் இருந்து ரூ.1,300/- கொண்டு வந்ததாகவும், அதில் மதிய சாப்பாடு எனக்கும் மற்ற ஊழியருக்கும் வாங்கின வகையில் ரூ.300/- செலவானது போக மீதி ரூ.1000/- பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்ததாகவும் கூறினார். அவரது மேஜை டிராயரில் இருந்த ரூ.13,980/- பற்றி விளக்கம் கேட்ட அதற்கு அவர் இன்றைய தினம்

ஆவணம் பதிவு செய்ய வந்தவர்கள் தனக்கு கொடுத்த பணம் என்றும், ஆனால் தான் யாரிடமும் பணம் கொடுங்கள் என்று கட்டாய படுத்தி கேட்கவில்லை என்றும், அவர்களாவே கொடுத்த பணத்தை வாங்கி டிராயரில் போட்டு வைத்தாதகவும் கூறினார். அதனால் மேற்படி தொகை ரூ.13,980/–ம் காவல் துணைக்கண்காணிப்பாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக பணியாளரின் கையிருப்பு பதிவேட்டை பார்த்த பொழுது அவர் ரூ.1300/–ஐ பதிவு செய்திருந்தது தெரியவந்தது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1000/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திரு.பால்ராஜ், இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,980/–ம் இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க அவர் இன்று காலை அலுவலகத்திற்கு வரும் பொழுது வீட்டிலிருந்து பணி முடித்து செல்லும் பொழுது பல்வலி சிகிச்சைக்காக மருந்து வாங்க ரூ.600/– எடுத்து வந்ததாகவும் கூறினார். மீதி பணம் ரூ.2380/–பற்றி விளக்கம் கேட்க சரியான விளக்கம் சொல்லாத காரணத்தால் மேற்கண்ட பணம் ரூ.2,380/–ம் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக பணியாளரின் கையிருப்பு பதிவேட்டை பார்த்த பொழுது அவர் ரூ.600/–ஐ பதிவு செய்திருந்தது தெரியவந்தது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.600/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திரு.பழனிச்சாமி, உதவியாளர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.640/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க அவர் இன்று காலை அலுவலகத்திற்கு வரும் பொழுது வீட்டிலிருந்து செலவுக்காக ரூ.250/– எடுத்து வந்ததாகவும் கூறினார். மீதி பணம் ரூ.390/–பற்றி விளக்கம் கேட்க சரியான விளக்கம் சொல்லாத காரணத்தால் மேற்கண்ட பணம் ரூ.390/–ம் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக பணியாளரின் கையிருப்பு பதிவேட்டை பார்த்த பொழுது அவர் ரூ.250/–ஐ பதிவு செய்திருந்தது தெரியவந்தது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.250/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திரு.பொன்னையா, வாட்சுமேன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,240/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க அவர் இன்று காலை அலுவலகத்திற்கு வரும் பொழுது வீட்டிலிருந்து செலவுக்காக ரூ.400/– எடுத்து வந்ததாகவும் அதில் சிகரெட் பாக்கு டீ ஆகியவற்றிற்கு ரூ.100/– செலவாகிவிட்டது என்றும், மீதி பணம் ரூ.300/– போக கூடுதலாக இருந்து ரூ.840/– இன்றைய தினம் ஆவணப்பதிவிற்கு வந்தவர்கள் தனக்கு கொடுத்தார்கள் என்று கூறினார். எனவே மேற்படி ரூ.840/– ம் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக பணியாளரின் கையிருப்பு பதிவேட்டை பார்த்த பொழுது அவர் ரூ.400/–ஐ பதிவு செய்யப்பட்டிருந்தது

தெரியவந்தது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.300/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திரு.நாகரெத்தினம், கேமரா ஆப்ரேட்டர் (ஒப்பந்த ஊழியர்) என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.100/-ம் இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க அவர் இன்று காலை அலுவலகத்திற்கு வரும் பொழுது வீட்டிலிருந்து செலவுக்காக ரூ.100/- எடுத்து வந்ததாகவும் அதை செலவு செய்யாமல் அப்படியே வைத்திருந்ததாக கூறினார். மேலும் அலுவலக பணியாளரின் கையிருப்பு பதிவேட்டை பார்த்த பொழுது அவர் ரூ.100/-ஐ பதிவு செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.100/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திரு.கார்த்திக் த/பெ பரமசிவம், (தனிநபர்) மறவப்பட்டி, அகரப்பட்டி அஞ்சல், புதுக்கோட்டை (சார்பதிவாளர் கார் ஓட்டுநர்) என்பவரை சோதனை செய்ய அவரிடம் எந்த ஒரு பணமும் இல்லை. அவரைப்பற்றி விசாரிக்க தான் சார் பதிவாளர் (பொறுப்பு) திரு.சண்முகநாதனின் உறவினர் என்றும், அவருடைய நான்கு சக்கர வாகனம் TN 55 AM 5757 (Swift Dzire) க்கு கடந்த ஒரு மாதமாக ஓட்டுநராக இருப்பதாக கூறினார்.

அதன்பிறகு அலுவலகத்திலிருந்த தனிநபரான திரு.சுரேந்தர், த/பெ கிருஷ்ணசாமி, எண்.1414, கம்பன் நகர் புதுக்கோட்டை என்பவரை விசாரணை செய்ய அவர் அவரது மனைவி திருமதி.கிஜானி என்பவர் பெயருக்கு ஈடு கடன் பத்திரம் ஆவண எண்.859/2019ன்படி 14.08.2019ஆம் தேதி மேற்படி சார்பதிவாளர் அலுவகத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும், மேற்படி ஆவணத்தை ரத்து செய்வது சம்மந்தமாக சார் பதிவாளர் அவர்களிடம் விபரம் கேட்க வந்தாகவும், தன்னுடன் 1) திரு.சண்முகப்பெருமாள், த/பெ ஹரி, எண்.9, வசந்த் நகர், கருமண்டபம், திருச்சி, 2) திரு.பராசரன், த/பெ தங்கவேல் எண்.290/31 எல்லன்புரம், அறந்தாங்கி, 3) திரு.பாஸ்கரன், த/பெ பாலசுப்பிரமணியன், 33, உசிலங்குளம் 2ம் வீதி, புதுக்கோட்டை, 4) திரு.கார்த்திகேயன், த/பெ நாரயணன் 1029/ஏ, தாவூதுமில், சிப்காட், புதுக்கோட்டை ஆகியோர் உடன் வந்ததாகவும் கூறினார். மேற்படி ஆவணத்தை பற்றி கேட்க சார் பதிவாளர் அவரது இருக்கைக்கு முன்பு இருந்து டேபிள் மேல் இருந்து எடுத்து கொடுத்தார். அதன் விபரம் பற்றி சுரேந்தர் என்பவரிடம் கேட்க அதற்கு தான் ஹோமியோபதி மருத்துவராக புதுக்கோட்டையில் இருந்துவருவதாகவும் தனது மனைவி கிஜானி பெயரில் உள்ள நிறுவனமான கிங் அவுஸ் யுனைடெட் ஸ்பிரிட் நிறுவனத்திற்கு ரூ.3,00,000/-க்கு தனது பொது அதிகார ஆவண மூலம் மணமேல்குடி காரக்கோட்டையில் உள்ள சொத்து மற்றும் கோயம்புத்தூர் விளங்குறிச்சியில் உள்ள சொத்து அதாவது ஆவணத்தில் கண்டுள்ள நான்கு சொத்து வகையறாக்களையும் ஈடு கடன் பத்திரம் மூலம் அடமானம் வைத்து மேற்படி ஆவணம் 14.08.2019ஆம் தேதி

ஆவண எண்.859/2019ன் படி மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும், மேற்படி ஈடு கடன் பத்திரத்தில் கண்டுள்ள இரண்டாவது சொத்தை மட்டும் ஈடு கடன் பத்திரத்திலிருந்து நீக்கம் செய்ய முடியுமா என்று ஆலோசனை கேட்க சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தான் வந்ததாகவும் தெரிவித்தார். இது குறித்து ஆவணத்தை பார்வையிட மேற்கண்ட அவர் கூறிய சொத்து குறித்த சங்கதிகள் இடம் பெற்றிருந்தது. மேலும் அவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த ஊதா நிற பேண்டின் வலது புற பாக்கெட்டிலிருந்து ரூ.1,14,200/- (2000 ரூபாய் நோட்டுகள் 57 மற்றும் 200 ரூபாய் நோட்டு 1) ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை பற்றி விளக்கம் கேட்க அவர் தான் போன வாரம் கோயம்புத்தூரில் தனது பெயரில் உள்ள சொத்தை ரூ.8,00,000/-க்கு விற்ற வகையில் மேற்படி பணம் எனது வங்கி கணக்கு மூலம் வந்தது என்றும் மேற்படி பணத்திலிருந்து துர்கா பூஜைக்காக சிலை வாங்குவதற்காக இரண்டு மூன்று நாட்களாக ஏடிஎம் மூலம் எடுத்ததாகவும் தெரிவித்து அவருடைய ஈக்வெட்டாஸ் வங்கி கணக்கு எண்.100000414738-ஐ கொடுத்தார். மேலும் தான் ஹோமியோபதி சிகிச்சை செய்த வகையில் கிடைத்த வருமானமும் கையில் இருந்தது என்று கூறினார். எனவே மேற்படி அவருடைய விளக்கம் ஏற்றுகொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1,14,200/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அறந்தாங்கியில் உள்ள தனது நண்பர் பராசரன் என்பவரை இயக்கம் சம்மந்தமாக சந்தித்துவிட்டு மேலும் மணமேல்குடியில் உள்ள பிஜேபி கட்சி நண்பர்களை சந்தித்துவிட்டு அலுவலகம் வந்து சார் பதிவாளரிடம் விபரம் கேட்க வந்ததாகவும் தெரிவித்தார்.

திரு.சண்முகப்பெருமாள், த/பெ ஹரி, எண்.9, வசந்த் நகர், கருமண்டபம், திருச்சி என்பவரை விசாரணை செய்ய தான் திரு.சுரேந்தர் என்பவரின் மைத்துனர் என்றும், அவருடன் துணைக்கு வந்ததாக கூறினார். மேலும் அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.52,010/- இருந்தது. மேற்கண்ட தொகை பற்றி விளக்கம் கேட்க மேற்படி தொகை எனது மைத்துனர் சுரேந்தர் தன்னிடம் கொடுத்து வைத்திருக்க சொன்னதாக கூறினார். இது சம்மந்தமாக சுரேந்தரிடம் கேட்க அவர் மேற்கண்ட தொகை ரூ.52,010/-ஐ சண்முக பெருமாளிடம் தான் கொடுத்து வைத்திருந்தாகவும், கட்சி நிர்வாகிகள் செலவுக்கு கேட்டு வாங்கி கொள்வார்கள் என்ற காரணத்தினால் அவரிடம் கொடுத்து வைத்திருந்தாகவும் தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.52,010/- ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திரு.பராசரன், த/பெ தங்கவேல் எண்.290/31 எல்என்புரம், அறந்தாங்கி, என்பவரை விசாரணை செய்ய தான் திரு.சுரேந்தர் என்பவருடன் வந்ததாக கூறினார். மேலும் அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,030/- இருந்தது. மேற்கண்ட தொகை

பற்றி விளக்கம் கேட்க அவர் தனது செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். எனவே அவரது விளக்கம் ஏற்றுகொள்ளப்பட்டு மேற்படி தொகை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திரு.பாஸ்கரன், த/பெ பாலசுப்பிரமணியன், 33, உசிலங்குளம் 2ம் வீதி, புதுக்கோட்டை என்பவரை விசாரணை செய்ய தான் திரு.சுரேந்தர் என்பவருடன் வந்ததாக கூறினார். மேலும் அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,070/- இருந்தது. மேற்கண்ட தொகை பற்றி விளக்கம் கேட்க அவர் தனது செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். எனவே அவரது விளக்கம் ஏற்றுகொள்ளப்பட்டு மேற்படி தொகை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திரு.கார்த்திகேயன், த/பெ நாராயணன் 1029/ஏ, தாவூதுமில், சிப்காட், புதுக்கோட்டை என்பவரை விசாரணை செய்ய தான் திரு.சுரேந்தர் என்பவருடன் வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்ய அவரிடம் எந்தவித பணமும் இல்லை.

மேலும் சார் பதிவாளர் (பொறுப்பு) திரு.சண்முகநாதன் அவர்களிடம் இன்றைய தினம் (25.09.2019) பதிவு செய்த ஆவணங்களை பற்றி கேட்க இன்று 6 கிரைய ஆவணமும், ஒரு ரசீது, 5 தான செட்டில்மெண்ட் மொத்தம் 12 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார். அதற்குரிய கணக்குபட்டியலை கேட்க அவர் கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து ஆஜர் செய்தார். அந்த ஏ, டி கணக்கு சி, டி, உட்பிரிவு மற்றும் பிரிவு 41 ஆகியவற்றிற்கான பட்டியல் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக வருகைப்பதிவேடு-3 மற்றும் பணியாளர் கையிருப்பு பதிவேடு மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.சுரேந்தர் என்பவருடை ஈடு கடன் பத்திர (ஆவண எண்.859/2019) நகல் கைப்பற்றப்பட்டது.

இச்சோதனையில் முடிவில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் ரூ.17,590/-ம் கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட மணமேல்குடி சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.சண்முகநாதன் மற்றும் சார்பதிவாளர் அலுவலக ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (திரு.பாலு, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி).

Received this complaint and registered a case in Pudukkottai V&AC Cr.No.10/2019 u/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption (Amendment) Act-2018 against 1) Tr.N.Shanmuganathan, 2) Tr.Paulraj, 3) Tr.Palanisamy and 4) Tr.Ponnaiah on 26.09.2019 at 01.15 hrs. (S/d. பா.கருப்பையா, DSP, V&AC, PDK Dt.26.09.2019)

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனு மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையின் அசல்களை புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

DSP/VAC/PDK
24/07/2019

Deputy Supdt of Police
Vigilance & Anti - Corruption
Pudukkottai District